செ.கு.எண்:13 நாள்:- 9.1.2013

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 9.1.2013

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம் வேட்டக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. சிங்காரவேலு என்பவர் 26.12.2012 அன்று விவசாய நிலத்திற்கு செல்லும் போது, அறுந்து கிடந்த மின்சார வயரை மிதித்ததால், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வடபட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரபாண்டியன் என்பவர் 25.12.2012 அன்று மின்சார வயர்களை சரிசெய்து கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்த சிங்காரவேலு மற்றும் வீரபாண்டியன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திரு.சிங்காரவேலு மற்றும் திரு. வீரபாண்டியன் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9